18 வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சைதாப்பேட்டை, சென்னை 15

சி.சி.எண்.2254/2023

அரசுதரப்பு சாட்சி 1 வாதிதரப்பு சாட்சி மனுதாரர் தரப்பு சாட்சி

பெயர் - ஜெயந்தி

க/பெ. =

வயது =

தொழில் =

முகவரி =

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

//1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டம் 10வது அத்தியாயத்தின் படி இன்று 2023ம் ஆண்டு நவம்பர் திங்கள் 09 என்னால் உறுதி செய்யப்பட்டது.//

**முதல் விசாரணை**

நான் தற்போது சாரங்கபாணி தெரு, தி.நகர், சென்னையில் குடியிருந்து, மேக்கப் ஆர்டிசாக பணிபுரிந்து வருகிறேன். நான் தி.நகரில் உள்ள ஹபிபுல்லா ரோட்டில் மேக்கப் போடுவதற்கான ஸ்டுடியோ ஒன்றை ஆரம்பித்திருந்தேன்.

அதனுடைய திறப்பு விழாவிற்கு அப்சரா ரெட்டி என்ற கங்கிரஸ் லீடர் ஒருவரை அதற்கு அழைத்திருந்தேன். அன்றைய தினம் எடுக்கப்பட்ட புகைப்படங்களை நான் ஸ்டுடியோ திறந்த விவரம் குறித்து எனது பேஸ்புக்கல் பக்கத்தில் பதிவேற்றம் செய்திருந்தேன்.

அந்த பதிவேற்றம் செய்யப்பட்ட போட்டோவினை ஜோ மைக்கேல் என்பவர் பதிவிறக்கம் செய்து யூ டியூப் சேனலில் இவர்கள் கொள்ளை அடிக்கும் கும்பல் இது மேக்கப் ஸ்டுடியோ கிடையாது புராஸ்டியூசன் செய்கிறார்கள் என்று தவறுதலாக யூ டியூப் சேனலில் ஒரு இண்டர்வியூவாக கொடுத்திருந்தார்.

அதைப் பார்த்த இரண்டு மூன்று நண்பர்கள் ஹரிணி, கண்ணன் மற்றும் உறவினர்கள் எல்லாம் என்ன நடந்தது என்று என்னை விசாரிக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் தான் கூப்பிட்டு எனது வீடியோ வந்திருப்பதாக என்னிடம்

சொன்னார்கள்.

நானும் அந்த வீடியோவை பார்த்தேன். நான் போன் செய்து ஜோ மைக்கேல் என்பவரிடம் ஏன் இவ்வாறு தவறுதலாக கூறுகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் நீங்கள் எல்லாம் டீமாக இருக்கிறார்கள் என்ன செய்கிறேன் பாருங்கள் என்று சொன்னார். நாங்கள் தப்பான தொழில் செய்வதாக சொன்னார்.

அதன் காரணத்தால் எனது தொழிலும் எனது தனிப்பட்ட வாழ்க்கையும் பாதித்தது. வீட்டில் பிரச்சினை ஏற்பட்டது. அதன் காரணத்தால் எனக்கு மன உளைச்சல் ஏற்பட்டது. மன உளைச்சலின் காரணமாக நான் தற்கொலை செய்யும் நிலைக்கு சென்றேன்.

இதுகுறித்து நான் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் காவல் நிலையத்தில் நான் கொடுத்ததுதான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் அ.சா.ஆ.1.

நான் புகார் அளித்த ஒரு வாரத்தில் எதிரியால் என்னைப் பற்றி பதிவேற்றம் செய்யப்பட்ட விவரங்கள் அழிக்கப்பட்டுவிட்டது. மேலும் என்னை பற்றி தவறாக சித்தரித்து யூ டியூப்பில் எதியால் பதிவேற்றம் செய்யப்பட்ட பிரதியை பெண்டிரைவ் மற்றும் சி.டி வாயிலாக நான் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். என்னால் பதிவிறக்கம் செய்யப்பட்ட பதிவுகள் குறித்து சாட்சிய சட்டப்பிரிவு 65(b)-ன் கீழ் சான்றிதழ் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் வழங்கினேன்.

**(ஆவணங்கள் குறியீடு செய்யும்பொருட்டு முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**